முருகப்பெருமான் துணை

**மகான் நாரதர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.05.2022,** திங்கட்கிழமை

1. தருமபலமிக்க தவராசனே
தரணியை ஞான வழிநடத்த
ஆறுமுகப் பெருமானின் சூட்சும
அவதாரமாக வந்த வள்ளலே
2. வள்ளலே உன்பெருமை கூறி
வகைபட சுபகிருது தகர் திங்கள்
சொல்லவே இருபானாற்திகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் சித்திரை மாதம் **26** ம் நாள், **09.05.2022** திங்கட்கிழமை)
சுருதிபடி அருளாசி தன்னை
3. தன்னையே நாரதர் யானும்
தாமுரைப்பேன் உலகநலம்பெற
மண்ணுலகில் ஞான ஆட்சி
மகான்கள் வெளிப்பட்டு நடக்க இருக்க
4. இருக்கவே கலியுக மக்கள்
இனியும் அசட்டை கொள்ளா
கருத்தாக ஞான வழி வந்தும்
கடமையாக ஞானிகள் பூசை
5. பூசையை தொடர்ந்து செய்து
புண்ணிய வழிதனில் இயங்க
பூசை விதி அருளும் அரங்கன்
பிரணவக் குடிலை நாடி
6. நாடியே ஞானபண்டிதன் சக்தியாக
ஞான சொரூபமாக உள்ள அரங்கன்
இடர் வெல்லும் தீட்சை ஏற்று
எல்லையிலா சக்திபலமிக்க
7. பலமிக்க மகாமந்திர செபதபம்
பழுதின்றி அனுதினமும் செய்ய
சலனமில்லா சரணாகதி ஆகி
சர்வமும் சாதக நிலை கூடி
8. கூடியே உலகம் எங்கிலும்
குருமார்கள் தயவு பெருகி
நாடெங்கிலும் ஞானிகள் வெளிப்பாடு
நடந்தேறி ஞான ஆட்சி எனும்
9. எனும் ஞானிகள் ஆட்சி பிறக்கும்
இணையிலா மாதவராசனான
ஞானதேசிகன் தரும் ஞானம்
நாடெங்கிலும் சமத்துவம் கூட்டி

10. கூட்டியே வளர்ச்சி மாற்றம்
குறைவிலா பாதுகாப்பு மிக்க
கட்டம் வாட்டமில்லா வண்ணம்
கலியிடர் விலகி ஞானயுகம் ஆக

11. ஆகவே உலகம் அமைதிபெறும்
ஆனந்த வாழ்வு கூடியே
மகான்கள் ஆகும் வாய்ப்பு
மனிதர்கட்கும் வரமாகக் கிட்டும்

அருளாசி முற்றே

–சுபம்–